**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 201/2024**

**ம.சா. 2**

நாள்: 18.02.2026

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தனசெல்வம் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் திருவனந்தபுரம் L &T நிறுவனத்தில் Executive Accountant ஆக வேலை பார்க்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையில் கேட்கப்பட்டிருந்த ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். இறந்துபோன செய்யது உசைன் எங்கள் நிறுவனத்தில் ஆகஸ்ட் 2015 ல் Trainee Engineer ஆக பணியில் சேர்ந்தார். அதன்பிறகு அவர் Site Engineer ஆக பணி நியமனம் செய்யப்பட்டு 3 வருடங்கள் வேலை பார்த்தார். பின்னர் 2020 ம் ஆண்டு Assistant Engineer ஆக பணிஉயர்வு பெற்று செப்டம்பர் 2023 வரை வேலை பார்த்தார். அவரது செப்டம்பர் மாத நிகர சம்பளம் ரூ.45,000/- வாங்கியுள்ளார். எங்கள் நிறுவனத்தில் 3-4 வருடத்திற்குள் பணி உயர்வு வழங்கப்படும். அதன்படி இறந்துபோன செய்யது உசைன் 2023-2024 ல் Executive Engineer ஆக பணி உயர்வு பெற்று இருந்திருப்பார். அவ்வாறு பதவி உயர்வு பெற்றிருந்தால் அவரது மாத நிகர சம்பளம் ரூ.58,000/- முதல் ரூ.60,000/- வரை இருந்திருக்கும்.



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.02.18 17:53:14 +0530

இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட **அங்கீகார கடிதம் அசல் சா.சா.ஆ.1** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன செய்யது உசைன் என்பவரின் **Service Certificate கணினியில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட் சா.சா.ஆ.2** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன செய்யது உசைன் என்பவரின் ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் 2023 ஆகிய மாதங்களுக்கான **சம்பள பட்டியல் கணினியில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட் சா.சா.ஆ.3** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி சா.சா.ஆ.2 மற்றும் சா.சா.ஆ.3 ஆகியவை கணினியில் இருந்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட எலக்ட்ரானிக் எவிடன்ஸ் என்பதால் BSA பிரிவு 63B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.18 17:53:20 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .